

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரை கிழக்கு தொகுதி வண்டியூரில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வீடு வீடாகச் சென்று நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் பகுதி செயலாளர் பாண்டியராஜன், மாமன்ற உறுப்பினர்கள் துரைப்பாண்டியன், கதிரவன், வட்டச் செயலாளர்கள் வெங்கடேசன், பொன்குமரன், இளைஞரணி திருமலை ராஜன், பொறியாளர் அணி பிரதீப், மாணவர் அணி ஏகநாத், தொண்டர் அணி பாண்டியராஜன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்டத் தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன் ஏற்பாட்டில் மாவட்ட கழக அலுவலகத்தில் தென்காசி ஒன்றியத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் 200 பேருக்கு நலத்திட்ட உதவிகளை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வழங்கினார். நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி, கனிமொழி, தென்காசி நகரச் செயலாளர் சாதிர், ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், திவான் ஒலி, தென்காசி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா, கடையநல்லூர் நகர செயலாளர் அப்பாஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கலில் – தொ.மு.ச. பேரவை

# தமிழ் மாநிலக் குழுத் தலைவர் ம.பசீர்அகமது நினைவேந்தல்!

## மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் அஞ்சலி!

திண்டுக்கல், டிச.10 -

திண்டுக்கல்லில் தொ.மு.ச. பேரவை தமிழ் மாநில குழு தலைவர் ம.பசீர்அகமது நினைவேந்தல் நிகழ்ச்சி கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டதோடு, கழக தொழிற் சங்கத்தில் பணியாற்றிய வர். மாவட்டப் பிரதிநிதி, நகரச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மாவட்ட அவைத்தலைவர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.

தொ.மு.ச. பேரவையின் துணைத் தலைவர், தொ.மு.ச. பேரவை தமிழ் மாநிலக்குழு தலைவர், மாவட்ட பஞ்சாலை தொழிற் சங்க தலைவர் என தொழிற் சங்கத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

இரண்டு முறை திண்டுக்கல் நகர்மன்றத் தலைவராக பணியாற்றி திண்டுக்கல் பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர். அவரின் நினைவேந்தல் நிகழ்ச்சி திண்டுக்கல் தொ.மு.ச. பஞ்சாலை கூட்டரங்கில் நடை பெற்றது. கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் தலைமை வகித்து அவர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து கழகத்திலும் தொழிற்சங்கத்திலும் அவர் பணியாற்றிதை நினைவு கூர்ந்தார்.

நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் கலந்து கொண்டு பேசினார்.

மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் அழகர்சாமி வரவேற்புரையாற்றினார் மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, துணைச் செயலாளர்கள் பிலால் உசேன், மார்க்கரேட்மேரி, மாநகரச் செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், பொதுக் குழு உறுப்பினர் அக்பர், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் இராஜேந்திரகுமார், வடக்கு பகுதி செயலாளர் ஜானகிராமன், வடக்கு ஒன்றிய செயலாளர் செழியன், தெற்கு ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

மாவட்ட இலக்கிய அணி முருகானந்தம், விவசாய அணி இல.கண்ணன், அரசு வழக்கறிஞர் சூசைராபர்ட், மாமன்ற உறுப்பினர் விஜயா, தொமுச பேரவை செயலாளர் மதுரை டாஸ்மாக் சிவப்பிரகாசம், மாவட்ட தொமுச கவுன்சில் தலைவர் சென்றாயன், பொருளாளர் உதயசூரியன், வட்ட கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பஞ்சாலை, டாஸ்மாக், போக்குவரத்துக்கழக, நுகர்பொருள் வாணிபக்கழக, நியாய விலைக்கடை தொமுச நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த பசீர்அகமது அவர்களின் புதல்வனும் மேற்கு பகுதி செயலாளருமான பஜுலுல்ஹக் நன்றியுரையாற்றினார்.

### தென்காசி வடக்கு மாவட்டம்

# சங்கரன் கோவில் நகரக் கழக முன்னாள் செயலாளர் பரம பால்பாண்டியன மறைவு!

## அப்துல் வகாப் எம்.எல்.ஏ. – ஈ.ராஜா எம்.எல்.ஏ. நேரில் அஞ்சலி!



தென்காசி, டிச. 10 -

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் கழக மூத்த முன்னோடி நகர கழக முன்னாள் செயலாளர் பரம பால்பாண்டியன் (வயது 71) அவர்கள் சங்கரன்கோவில் பாரதியார் 4ம் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் உடல் நலக்குறைவு காரணமாக 06.12.2024 வெள்ளிக்கிழமை அன்று இரவு 9 மணி அளவில் மறைவெய்தினார்.

அன்னாரது இறுதி சடங்கில் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் பங்கேற்று மறைந்த நகர கழக முன்னாள் செயலாளர் பரமபால் பாண்டியன் அவர்கள் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அவர் உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டு பாளை அரசு மருத்துவமனை சிகிச்சை பெற்று வந்த போது அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அவருக்கு பலமுறை பொருளாதார ரீதியாக உதவி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதி சடங்கு நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன்,மாவட்டப் பொருளாளர் சரவணன், துணைச் செயலாளர்கள் புனிதா, ராஜதுரை, மனோகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், பரமகுரு, பொதுக்குழு உறுப்பினர்கள் தேவா, மகேஸ்வரி, வழக்கறிஞர் அணி தலைவர் முத்துராமலிங்கம்,ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன்,பூசைதுரை, கடற்கரை, பொன் முத்தையாபாண்டியன், கிறிஸ்டோபர்,வெள்ளத்துரை,

பால்ராஜ், ராமச்சந்திரன், சேர்மதுரை, சங்கரநாராயணசாமி கோவில் அறங்காவலர் குழு தலைவர் து.சண்முகையா,நகர செயலாளர் மு.பிரகாஷ், முன்னாள் மாவட்ட பிரதிநிதி சோமசெல்வபாண்டியன், பேரூர் செயலாளர்கள் மாரிமுத்து, ரூபி பால சுப்பிரமணியன், கேடிசி குருசாமி,சேது சுப்பிர மணியன், கழக மூத்த முன்னோடிகள் சுப்பையா, சங்கரன், முனியசாமி,துணை செயலாளர் முத்துக் குமார், சுப்புதாய், நகர்மன்றத் தலைவர் உமா மகேஸ்வரி,கழக மூத்த முன்னோடி கள் முட்டை சுப்பையா, சங்கரன், முனியசாமி, இளைஞர் அணி சரவணன், கார்த்தி, ராஜராஜன், சுற்று சூழல் அணி ஜலால் உள்பட கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அனைத்துக் கட்சியினர் கலந்து கொண்டனர்.

### திருமங்கலம் தொகுதி – பேரையூர்

# பேரூர் அவைத்தலைவர் அப்துல் ஜப்பார் மறைவு!

## மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆறுதல் - கழகத்தினர் அஞ்சலி!



மதுரை, டிச. 10 -

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதி பேரையூர் பேரூர் கழக அவைத்தலைவர், கழக முன்னோடி அப்துல் ஜப்பார் இயற்கை எய்தியதையடுத்து அன்னாரின் குடும்பத்தாருக்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆறுதல் கூறி இரங்கல் தெரிவித்தார். கழகத்தினர், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினார்கள், அதன் விபரம் வருமாறு:

மதுரை தெற்கு மாவட்டம் பேரையூர் பேரூர் கழகத்தின் அவை தலைவராகவும், தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சாதிக் மொகைதீன் தந்தையுமான அப்துல் ஜப்பார் வயது(80), வயது மூப்பு மற்றும் உடல் நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலம் தொட்டு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் காலம் தொட்டும் தொடர்ந்து கழக பணியாற்றி பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர் ஆவார்.

தமது இறுதி மூச்சு உள்ளவரை கழகக் கொடியை கையில் ஏந்தி போராட்டம் கண்டவர்.

அவர் மேலும் பேரையூர் பகுதியில் கூட்டுறவு பால்வளத்துறை தலைவராகவும் பணியாற்றி, கழகத்தினரிடமும், பொது மக்கள் மத்தியிலும் இனிமையாக பழகி கழக பணியாற்றினார். இவருக்கு மூன்று மகன்கள் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்த உடன் மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், அன்னாரின் குடும்பத்தாரை தொடர்பு கொண்டு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்து ஆறுதல் கூறினார்.

மேலும் திரளான கழகத்தினர், பொதுமக்கள், பல்வேறு கட்சியினர் அஞ்சலி செலுத்தி குடும்பத் தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.



மதுரை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி உசிலம்பட்டியில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ரகு முன்னிலையில், மாவட்ட துணை செயலாளர் ஜெகதீஸ் ஏற்பாட்டில் திறந்து வைத்தனர். உடன் கழக நிர்வாகிகள் கே.இளமகிழன், எஸ்.ஓ.ஆர்.தங்கபாண்டியன், விமல், பழனி மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், இளைஞர் அணியினர், பொதுமக்கள் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மாதிரியில் – அகில இந்திய

# சித்தா ஆராய்ச்சி - மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவ திட்டம் உள்ளதா?

## மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, டிச. 10 -

தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மாதிரியில் அகில இந்திய சித்தா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவ ஒன்றிய அரசிடம் திட்டம் உள்ளதா? மக்களவையில் வேலூர் நாடாளுமன்றத் தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து மக்களவையில் அவரது கேள்வி வருமாறு:

ஆயுஷ் பார்மா பூங்காவை நிறுவுவதற்கு ஒன்றிய அரசு ஏதேனும் கொள்கையை வகுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்,

தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மாதிரியில் அகில இந்திய சித்தா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவுவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்மொழிவு உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்: மற்றும் கடந்த ஐந்தாண்டுகளில் சித்த மருத்துவ முறை மற்றும் சித்த மருந்துகளின் வளர்ச்சிக்காக தமிழகத்திற்கு ஆண்டு வாரியாக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? என கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் ஸ்ரீ பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

தமிழ் நாட்டில் ஆயுஷ் பார்மா பூங்காவை நிறுவுவதற்கு ஒன்றிய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தில் கொள்கை எதுவும் உருவாக்கப்படவில்லை.

மேலும் தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மாதிரியில் அகில இந்திய சித்தா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவ தற்போது திட்டம் எதுவும் ஆயுஷ் அமைச்சகத்தின் பரிசீலனையில் இல்லை.

சித்த மருத்துவ முறை மற்றும் சித்த மருந்துகளின் மேம்பாட்டிற்காக ஆயுஷ் அமைச்சகம் தமிழ்நாடு, சென்னையில் தேசிய சித்த நிறுவனத்தை (NIS) நிறுவியுள்ளது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள CCRS இன் பின்வரும் புற நிறுவனங்கள் / அலகுகள்:

i. சித்த மத்திய ஆராய்ச்சி நிறுவனம். சென்னை.

ii. சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவு, பாளையங்கோட்டை.

iii சித்த மருத்துவ தாவரங்கள் தோட்டம், மேட்டூர் அணை.

ஆயுஷ் அமைச்சகம் தமிழ்நாடு உள்ளிட்ட மாநில/யூனியன் பிரதேச அரசுகள் மூலம் தேசிய ஆயுஷ் இயக்கத்தின் (NAM) மத்திய நிதியுதவி திட்டத்தை செயல்படுத்தி> பல்வேறு நடவடிக்கைகளின் கீழ் நிதி உதவி வழங்குவதன் மூலம் நாட்டில் சித்த மருத்துவ முறை உட்பட ஆயுஷ் முறையை ஒட்டு மொத்த மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பதற்கான அவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கிறது. NAM வழிகாட்டுதல்களின் விதிகளின்படி மாநில வருடாந்திர செயல் திட்டங்கள் (SAAPS) மூலம் பெறப்பட்ட அவர்களின் முன்மொழிவுகளுக்கு ஏற்ப தமிழ்நாடு மாநில அரசு சித்த மருத்துவ முறை மற்றும் சித்த மருந்துகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு NAM திட்டத்தின் கீழ் நிதியைப் பெற்றுள்ளது.

ஆயுஷ் அமைச்சகம் ஆயுஷ் மருந்துகளின் தரத்தை உயர்த்துவதற்கான மத்தியத் துறைத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. ஆயுஷ் மருந்தகங்கள் மற்றும் மருந்து பரிசோதனை ஆய்வகங்களை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவை AOGUSY திட்டத்தின் கீழ் உள்ள கூறுகளில் ஒன்றாகும். தமிழக அரசு இந்த கூறுகளின் கீழ் நிதியைப் பெற்றுள்ளது.

CCRS தலைமையகம் மற்றும் அதன் தமிழ்நாடு மற்றும் NIS இல் உள்ள அதன் புற நிறுவனங்கள்/அலகுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் NAM திட்டம் மற்றும் AOGUSY திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசுக்கு விடுவிக்கப்பட்ட நிதி கடந்த ஐந்து ஆண்டுகளில், ஆண்டு வாரியாக இணைப்பு I இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அதன் படி கடந்த ஐந்து ஆண்டுகளில் CCRS தலைமையகத்துக்கு ரூ. 154.53 கோடியும்> தேசிய சித்த நிறுவனத்துக்கு ரூ. 270.31 கோடியும் NAM திட்டம் மற்றும் AOGUSY திட்டத்தின் கீழ் ரூ. 140.20 கோடியும் என மொத்தம் ரூ. 565.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் தனது பதிலில் கூறி யுள்ளார்.

# சிவகங்கையில் ரூ.37 லட்சத்தில் சிறுவர் பூங்கா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!

சிவகங்கை, டிச. 10 -

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகராட்சிக்கு உட்பட்ட 26, 27வார்டுகளுக்கான இந்திரா நகரில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் ரூ.37 லட்சத்தில் அமைக்கப்பட்ட சிறுவர்களுக்கான நவீன பூங்கா திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம். துரை.ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது.

நகராட்சி ஆணையர் கிருஷ்ணா ராம் வரவேற்று பேசினார்.

புதிய பூங்காவினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை நகர் மன்ற துணை தலைவர் எம். கார் கண்ணன் திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த. சேங்கைமாறன் வார்டு கவுன்சிலர் மதியழகன் மற்றும் கவுன்சிலர்கள் விஜயகுமார் ,ராம்தாஸ் ,

வீனஸ் ராமநாதன்,அ. அயூப் கான், ஜெயகாந்தன், மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் திலகவதிகண்ணன், ஒன்றிய செயலாளர் கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், விராமதி மாணிக்கம், மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய துணை செயலாளர் முத்துகுமார் மற்றும் நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டார்கள் . நகராட்சி பொறியாளர் முத்து நன்றி கூறினார்.



தேனி வடக்கு மாவட்டம்போடி கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.பி.அய்யப்பன் ஏற்பாட்டில் கோடங்கிபட்டியில் உள்ள மனிதநேய காப்பகத்தில்கழக மாநில இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வடக்கு மாவட்டச் செயலாளரும், தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான தங்கத்தமிழ்செல்வன் ஆதரவற்றோர் குழந்தைகளுக்கு இனிப்புகள் போர்வைகள் மதிய உணவு வழங்கினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் கண்ணன். உத்தமபாளையம் முன்னாள் ஒன்றியச் செயலாளர் முல்லை சேகர் மற்றும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. வழிகாட்டுதலின்படி தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.ஆலோசனைப்படி மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் சங்கரன்கோவில் தொகுதிக்கு உட்பட்ட குருவிகுளம் ஒன்றியம் பழங்கோட்டையில் இலவச சட்ட ஆலோசனை முகாம் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.பிச்சையா ஏற்பாட்டில் நடைபெற்றது.இந்த முகாமில் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு 80 மனுக்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட துறைக்கு மேல்நடவடிக்கை எடுக்க அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.மேலும் 50 க்கும் மேற்பட்டோர் ஆலோசனை பெற்றனர். முகாமில் துணைத் தலைவர் முத்துவேலன், துணை அமைப்பாளர்கள் ஜெயக்குமார், பிரபாகரன், காளிராஜ், தனசேகரன், அரசு வழக்கறிஞர்கள் கண்ணன், பேட்டரி பாபு ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த இலவச சட்ட ஆலோசனை முகாம் மூலம் ஏழை,எளிய மக்கள் பெரிய அளவில் பயன்பெற்றனர்.